# தேர்தல் ஆணைக்குழு

## பதவி வெற்றிடம்

தேர்தல் ஆணைக்குழுவில் தற்போது வெற்றிடம் நிலவும் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு அரச சேவையில் பணியாற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவியில் அல்லது அதற்கு சமமான பதவியொன்றில் பணியாற்றும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கடமையின் தன்மை - தேர்தல் ஆணைக்குழுவின் மற்றும் அதன் கீழ் நிலவும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் புதிய நிர்மாணப் பணிகள், மேம்படுத்தல்கள் மற்றும் பழுதுபார்ப்புக்கள் தொடர்பான பணி மேற்பார்வை மற்றும் நிர்மாணப் பணிகளுடன் தொடர்பான திட்ட வரைபடங்களை தயாரித்தல், மதிப்பீடுகளை தயாரித்தல், பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், கொடுப்பனவுகளுக்காக முன்வைக்கப்படும் ஆவணங்களைப் பரீட்சித்து பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் பதவியுடன் தொடர்புடைய வகையில் தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமை சார்ந்த அலுவல்கள்.

குறிப்பு - தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, தேர்தல் காலப் பகுதியில் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவினால் அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் பதவியுடன் நேரடியான தொடர்பற்ற, தேர்தல் ஆணைக்குழுவின் கடமைகளிலும் ஈடுபட வேண்டியேற்படுவதுடன் தேர்தல் ஏற்பாட்டு அலுவல்களின்போது தேர்தல் ஆணைக்குழுவின் அலுவல்கள் சம்பந்தமான அனுபவத்தைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.

சகல விண்ணப்பதாரிகளும்,

I. அரச சேவையில் பணியாற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவியில் அல்லது அதற்கு சமமான பதவியொன்றில் தற்போது பணியாற்றும் அலுவலராக இருத்தல் வேண்டும்.

II. கணனியைப் பயன்படுத்தல் சம்பந்தமான அறிவு மற்றும் மும்மொழி அறிவு (மேலதிக தகைமையாகக் கருதப்படும்)

III. பதவிக்குரித்தான அலுவல்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. அரச சேவையில் நன்னடத்தையுடன் பணியாற்றும் அலுவலராக இருத்தல்.

<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை</u>

தம்மால் தயாரித்துக்கொள்ளப்பட்ட சுய விபரங்கள் மற்றும் சேவை தொடர்பான விபரங்களடங்கிய விண்ணப்பத்தை தனது நிறுவனத் தலைவர் ஊடாக 2023.06.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, ராஜகிரிய. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டுமென்பதோடு, விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேர்தல் ஆணைக்குழுவின் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவிக்கு விண்ணப்பித்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

2023.06.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதுடன், அதன் பின்னர் இப் பதவிக்குப் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமொன்றிருப்பின் அது சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேர்தல் ஆணைக்குழுவுக்குரியதுடன், அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்ட ஒழுங்கவிதிகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்வதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,

சமன் ஸ்ரீ ரத்னாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

2023 மே மாதம் 29 ஆம் திகதி
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய.